# தேவனை அறிவது மெய்யாகவே சிறந்தது




## 1.7 சர்வ வல்ல தேவன்

**வேத வசனம்:** **அந்த மனுஷர்கள் ஆச்சரியப்பட்டு, இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்றார்கள்.**
*மத்தேயு 8:27*

**அறிக்கை:** **மனிதனாலே இது கூடாது. ஆனால் தேவனாலே எல்லாம் கூடும்**



**சத்தியம்:** கர்த்தர் மகா பெரியவரும் நம் ஆராதனைக்குப் பாத்திரருமாயிருக்கிறார். அவருடைய மகத்துவத்தை அளவிட முடியாது. தற்போதுள்ள சந்ததி தேவனுடைய வல்ல செயல்களுக்காய் அவரைத் துதித்து அவைகளை அடுத்த தலைமுறையினருக்கு அறிவிக்கும்.

### வேத பகுதி: மத்தேயு 8:23-27

**பாடம்**

**1. தேவனுடைய சர்வ வல்ல செயல்கள்:** தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து உலகில் இருந்தபோது ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம்பேரை போஷித்தார். "அப்பொழுது அவர் அந்த ஐந்து அப்பங்களையும் அந்த இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, அவைகளை ஆசீர்வதித்து, பிட்டு, ஜனங்கள்முன் வைக்கும்படி சீஷர்களிடத்தில் கொடுத்தார். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். மீதியான துணிக்கைகள் பன்னிரண்டு கூடைநிறைய எடுக்கப்பட்டது". சுகப்படுத்த முடியாத வியாதியுள்ளவர்களைச் சுகப்படுத்தினார், பார்வையற்றவர்களுக்கு பார்வைத்தந்தார்... காற்றும் கடலும் கூட அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தது. (லூக்கா 9:12-15)

**2. தேவனுடைய சர்வ வல்ல கட்டளைகள்:** தேவன் செங்கடலை இரண்டாகப் பிளந்து தெரிந்தெடுக்கப்பட்ட அவருடைய பிள்ளைகளாகிய இஸ்ரவேலரை அதின் நடுவே கடந்துபோகப்பண்ணினார். "கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டுபோகப்பண்ணினார். ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று. இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோனார்கள்". தேவன் கட்டளைக்கொடுத்த போது கடல் பிளந்து தரை தென்பட்டது. அப்போதைய இறையியலாளர்களால் கடலின் ஆழத்தைக் கணக்கிட முடியவில்லை. முழு கடலும் சராசரியாக 558 மீட்டர்கள் ஆழமுடையது. அதன் அதிகப்படியான ஆழம் 2514 மீட்டர்கள். அது ஒருவரும் கடக்கக்கூடாத அளவு ஆழமுடையது. பார்வோனின் குதிரைப் படையையும் அதோடு அவனுடைய முழு சேனையையும் மூழ்கடிக்கும் அளவு பெரியது. (யாத். 14:21-30)

**3. தேவனாலே கூடாதவைகள் எதுவும் இல்லை:** நம்முடைய யெகோவா தேவன் சர்வ வல்லமையுள்ளவர். "வானங்கள் உம்முடையது, பூமியும் உம்முடையது, பூலோகத்தையும் அதிலுள்ள யாவையும் நீரே அஸ்திபாரப்படுத்தினீர்" என்று வேதம் சொல்லுகிறது. அவர் வானத்தையும் பூமியையும் படைத்தவர். தேவனாலே கூடாதகாரியம் ஒன்றும் இல்லை. (சங். 89:11)

**4. தேவன் நம்பத்தகுந்தவரும் பற்றிக்கொள்ள தகுதியுமுள்ளவர்:** வேதாகமம் நாம் தேவனை எப்போதும் நம்பியிருக்கவேண்டும் என்று குறிப்பிடுகிறது. காரணம் தேவனை நம்பியிருக்கிறவர்களை அவர் ஆசீர்வதிப்பார். "சேனைகளின் கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிற மனுஷன் பாக்கியவான்". (சங். 84:12)

**முடிவுரை:** சர்வ வல்ல தேவனாகிய நம்முடைய உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசு, நமக்கு உதவிகள் செய்ய இயன்றவராகவும், விருப்பமுள்ளவராகவும் இருக்கிறார். ஆகையால் நாம் எப்போதும் அவரிடம் ஜெபிக்கவும் அவரைச் சார்ந்திருக்கவும் வேண்டும்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.